# இறந்த பின்னரும் உலகைக்காண எங்கள் கண்களைத் தானம் செய்வோம்.



நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்க ஆதரவில் வெளியிடப்பட்டது.

## யாழ் குடாநாட்டில்

## கண்தானத்தின் அவசியம்

இன்று யாழ் குடாநாட்டில் சிறுவர் உட்பட நூற்றுக் கணக்கானோர் பல்வேறு காரணங்களால் கண்ணின் விழிவெண்படலம் பாதிக்கப்பட்டு பலர் பார்வை இழந்தும் பலர் பார்வை இழக்கும் நிலையிலும் உள்ளனர்.

இவர்களுக்கு கண்தானம் செய்த ஒருவரின் கண்ணில் இருந்து விழிவெண்படலத்தை அகற்றி பொருத்துவதன் மூலமே இயல்பான பார்வையை வழங்கமுடியும். யாழ் போதனா வைத்தியசாலையில் விழிவெண்படல மாற்றுச் சிகிச்சைக்குரிய வசதிகள் இருந்தும் கண்தானம் செய்வோரின் எண்ணிக்கை மிகக் குறைவாகையால் விழிவெண்படலம் பாதிக்கப்பட்டோர் தொடர்ந்து பார்வை இழந்தவர்களாகவோ அல்லது பார்வை மிகப் பாதிக்கப்பட்டவர்களாகவோ வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

நாம் அனைவரும் கண்தானம் மேற்கொள்ள முன்வருவதன் மூலமே இவர்களுக்கு ஒரு வளமான எதிர்காலத்தை வழங்க முடியும்.

## யார் கண்தானம் செய்யலாம்?

- பத்து வயதிற்கு மேற்பட்ட இருபாலாரும் கண் தானம் செய்யலாம்.
- மூக்குக்கண்ணாடி பாவிப்பவர்களும் கண் வில்லை சத்திரசிகிச்சை (கற்றாக்ற்) மேற்கொண்டவர்களும் கூட கண் தானம் செய்யலாம்.

## ஒருவர் கண்தானம் செய்வது எவ்வாறு?

ஒருவர் தனது இறப்பின் பின் தனது கண்களை தானம் செய்வதாகஅறிவித்திருந்தால் (கண்தான படிவத்தைப் பூர்த்தி செய்து கொடுப்பதன் மூலம்) அவருடைய கண்கள் தானமாக ஏற்றுக்கொள்ளப்படும். இப் படிவத்தைப் பூர்த்தி செய்து யாழ் போதனா வைத்தியசாலையின் கண்வாட்டில் கொடுத்தல் வேண்டும்.

**அல்லது**

ஒருவர் இறப்பு எய்திய ஐந்து மணித்தியாலத்திற்குள் இறந்தவரின் உறவினர் கண்தானம் செய்ய விரும்புவதாக எழுத்து மூலமாக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அறிவித்தால் மாத்திரமே கண்கள் தானமாக ஏற்றுக் கொள்ளப்படும்.

## யாருடைய கண்கள் தானமாக ஏற்கப்படுவதில்லை?

காசநோய், புற்றுநோய், பாலியல் நோய்கள், செப்ரிசீமியா, கொப்புளிப்பான், மூளைக்காய்ச்சல், செங்கண்மாரி, பாம்புக்கடி, விசர்நாய்க்கடி, நஞ்சருந்துதல், நஞ்சூறல், மோசமான எரிகாயங்கள் போன்றவற்றால் இறப்போரின் கண்கள் தானமாக ஏற்கப்படுவதில்லை. ஏனெனில் இவர்களின் கண்கள் கண்தானம் பெறுபவர்களில் மேலும் பல பாதிப்புகளை ஏற்படுத்தும்.

# கண்தானத்தைப் பற்றிய சில முக்கிய தகவல்கள்

- ஒருவர் இறந்து இரண்டு மணித்தியாலங்களிற்குள் கண்தானம் செய்வது சிறந்தது. ஆனால் ஆறு மணித்தியாலம் வரை கண் தானம் செய்யலாம். அதன் பின் கண் கெட்டு விடும்.
- இறந்தவரின் உடலில் இருந்து கண்களை அகற்ற சில நிமிடங்களே செல்வாகும்.
- கண்கள் அகற்றப்பட்ட குழிகளினுள் செயற்கையான பொருள் ஒன்று வைக்கப்பட்டு இமைகள் மூடப்படுவதால் கண்கள் அகற்றப்பட்ட அடையாளம் தெரியாது.
- இறந்தவரின் குருதி உறைந்து விடுவதால் கண்கள் அகற்றும்போதோ அதன் பின்னரோ குருதி வெளியேறாது.

Print by Karan Printers

## நீங்கள் செய்யக்கூடியது என்ன?

- கண்தானத்ததைப்பற்றி உங்கள் தாய் தந்தையர் உறவினர்களுக்கு எடுத்துக் கூறுங்கள்.
- இப்பிரசுரத்தை உங்கள் நண்பர்களுக்கும் அயலவருக்கும் வாசிக்கக் கொடுங்கள்.
- கண்தானம் மேற்கொள்ள விரும்பும் உங்கள் உறவினருக்கும் வயோதிபர்களுக்கும் கண்தான படிவத்தை யாழ் போதனா வைத்தியசாலையின் கண் வாட்டில் இருந்து எடுத்துக் கொடுத்து அப்படிவத்தை பூர்த்தி செய்ய உதவுங்கள்.


**தயாரிப்பு:**

**கல்விசார் பொருட்கள் தயாரிப்பலகு**
**சமுதாய மருத்துவத்துறை,**
**மருத்துவபீடம்,**
**யாழ்பல்கலைக்கழகம்.**

**2002**